பெயர் :                                                                                                    திகதி :

**வரலாறு ஆண்டு 5**

**நாட்டின் சுத்தந்திரப் போராட்ட நிகழ்வுகளை வருடங்களுக்கு ஏற்ப இணைத்திடுக.** ( பாடநூல் பக்கம் 80-81 )

### ஜப்பானியர் ஆக்கிரமிப்பு

- ஜப்பானியர் ஆக்கிரமிப்புப் பெரும் துயரத்தை ஏற்படுத்தியது.
- உள்ளூர்த் தலைவர்கள் சுதந்திரத்திற்கு முழுமூச்சாய்ப் போராடினர்.

### கம்னியூஸ்ட்டு அச்சுறுத்தல்

- மலாயாவின் கம்னியூஸ்ட்டுக் கட்சி கொலை செய்தல், ஈயச் சுரங்கங்களையும் ரப்பர் தோட்டங்களையும் அழித்தல் போன்ற கொடுமைகளைப் புரிந்தது.
- கம்னியூஸ்டின் வன்செயல்களின் விளைவாக 1948ஆம் ஆண்டு நாடு முழுவதும் அவசரக்காலம் (darurat) பிரகடனப்படுத்தப்பட்டது.
- 1955ஆம் ஆண்டில் பாலிங்கில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.
- 1960ஆம் ஆண்டில் அவசரக்காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

### மலேயன் யூனியன்

- புதிய காலனித்துவ வடிவமாகப் பிரிட்டிஷார் மலேயன் யூனியனை அறிமுகப்படுத்தினர்.
- மலாய் அரசர்களின் அதிகாரத்தை அழித்தனர்.
- டத்தோ ஓன் பின் ஜபார் மலாய்க்காரர்களுக்குத் தலைமையேற்று மலேயன் யூனியனை எதிர்த்தார்.
- 1948ஆம் ஆண்டில் மலேயன் யூனியனுக்குப் பதிலாகக் கூட்டரசு மலாயா அமைக்கப்பட்டது.

**1942-1945**

**1946-1948**

**1948**

LIVEWORKSHEETS

## கூட்டரசு சட்டச் சபைக்கான தேர்தல்

- தேர்தலை எதிர்நோக்க அம்னோ, மசீச, மஇகா அங்கத்துவம் பெற்ற கூட்டணிக் கட்சி அமைக்கப்பட்டது.
- இந்தக் கூட்டணிக் கட்சியில் மலாய்க்காரர், சீனர், இந்தியர் பிரதிநிதித்துவம் இருந்தது. இத்தேர்தலில் கூட்டணிக் கட்சி வெற்றி பெற்றது.
- துங்கு அப்துல் ரஹ்மான் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார்.
- கூட்டணிக் கட்சி பிரிட்டிஷாருடன் சுதந்திரப் பேச்சுவார்த்தையை நடத்தியது.

## கூட்டரசு மலாயாவின் சுதந்திரம்

31 ஆகஸ்ட்டு 1957ஆம் ஆண்டு துங்கு அப்துல் ரஹ்மான் கூட்டரசு மலாயாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தார்.

## அரசியல் கட்சிகளின் தோற்றம்

- 1945ஆம் ஆண்டு மலாயாத் தேசிய மலாய்க்காரர்கள் கட்சி [Parti Kebangsaan Melayu Malaya (PKMM)].
- 1946ஆம் ஆண்டு அம்னோ [United Malays National Organisation (UMNO)].
- 1946ஆம் ஆண்டு மஇகா [Malayan Indian Congress (MIC)].
- 1948ஆம் ஆண்டு ஹிஸ்புல் முஸ்லிமின் (Hizbul Muslimin).
- 1949ஆம் ஆண்டு மசீச [Malayan Chinese Association (MCA)].
- 1951ஆம் ஆண்டு பாஸ் [Parti Islam Se-Malaya (PAS)].

## லண்டன் பேச்சுவார்த்தை

- மலாய் அரசர்களின் நிகராளிகளும் கூட்டணிக் கட்சியின் நிகராளிகளும் லண்டன் சென்றனர்.
- இக்குழு லண்டன் சென்ற நோக்கம் பிரிட்டிஷாருடன் சுதந்திரம் தொடர்பான பேச்சுவார்த்தை நடத்துவதற்கே ஆகும்.

1945-1951

1956

1957

1955

LIVEWORKSHEETS